வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்,

ந,க.எண். 3809 /அ1/2023 நாள் : .09.2023

-----

பொருள் : பள்ளிக் கல்வி – அரசுத் துறைகளில் காணப்படும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பின்னடைவுப் பணியிடங்கள் / குறைவுப் பணியிடங்கள் விவரங்கள் இனவாரியான விவரங்களும் மற்றும் மாற்றுத்திறன் பணியாளர்களின் விவரமும் – கோருதல் – தொடர்பாக.

பார்வை : சென்னை -6 தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.52211/அ4/2022 நாள் 07.09.2023

-----

பார்வையில் காணும் பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) அவர்களின் செயல்முறைக் கடிதத்தின் படி வேலூர் மாவட்டம், அரசு பள்ளி மற்றும் அலுவலகத்தில் உள்ள தொகுதி C க்கான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான குறைவுப் பணியிடங்களாக ( Shortfall Vacants for SC / ST) உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடிதங்களில் உதவியாளர் மற்றும் இளநிலை உதவியாளர் பதவிக்கான SC/ST பிரிவுகளுக்கான குறைவுப் பணியிடங்களின் விவரங்களை தமிழ்நாடு அரசுப் பணியாளர் (நிபந்தனைகள்) சட்டம் 2016இன் பிரிவு 22(h) இன்படி இனவாரியாக (Categories -Wise Breakup) வழங்கு கோரப்படுகிறது.

மேலும் பள்ளிக் கல்வித் துறையில் பணிபுரியும் ஆசிரியரல்லாத ( உதவியாளர் / இளநிலை உதவியாளர் / தட்டச்சர் / சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை -III) பணியாளர்களில் மாற்றுத் திறனாளி பணியாளர்களின் புள்ளி விவரங்களை வழங்க கோரப்படுகிறது.

எனவே மேற்காணும் ஆசிரியரல்லாத (உதவியாளர் / இளநிலை உதவியாளர் / தட்டச்சர் / சுருக்கெழுத்து தட்டச்சர் நிலை – I, II மற்றும் III ) பணியாளர்களின் இனவாரியான புள்ளி விவரங்களையும், மாற்றுத் திறனாளி பணியாளர்களின் விவரங்களையும் இணைக்கப்பட்டுள்ள Google Form ல் Excel லில் மருதம் Font இல் தட்டச்சு செய்து காலதாமதம் ஏதுமின்றி நினைவூட்டுதலுக்கு இடமளிக்காமல் பதிவுகள் மேற்கொண்டு அதற்குரிய நகலினை 08.09.2023 5.00 மணிக்குள் ஒப்படைக்குமாறு அனைத்து அரசு / நகராட்சி / உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு** - Google Link & படிவம்

// ஒப்பம் //

// செ.மணிமொழி //

முதன்மைக் கல்வி அலுவலர்,

வேலூர் – 9.

பெறுநர்

1. மாவட்டக் கல்வி அலுவலர், (இடைநிலைக்கல்வி) வேலூர்.-9.
2. மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி ) வேலூர்.
3. மாவட்டக் கல்வி அலுவலர் ( தனியார்) வேலூர்.
4. அனைத்து அரசு நகராட்சி/ உயர்நிலை / மேல்நிலை தலைமை ஆசிரியர்கள்